# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:18** **தேதி:-05.02.2015**

## மத்திய மாநில சங்க செய்திகள்

அன்பார்ந்த தோழர்களே,

**2014ஆம் ஆண்டுக்கான TTA LICE தேர்வு:-** 2014ஆம் ஆண்டுக்கான TTA LICE தேர்விற்கான தயாரிப்பு பணிகளை துவங்குமாறு மாநில தலைமை பொது மேலாளர்களை கார்ப்பரேட் அலுவலகம் அறிவுறுத்தியுள்ளது. 31.12.2014 வரைக்குமான காலியிடங்களை கணக்கில் எடுக்க வேண்டும் என்றும், அதில் 50% இடங்களுக்கு LICE தேர்வு நடத்தி நிரப்ப வேண்டும் என்றும், அந்த தேர்வில் வெற்றி பெறுபவர்கள் CIRCLE CADREஆக கருதப்படுவார்கள் எனவும், தேர்வு விதிகளின் படி 01.07.2014 என்பது தகுதிகளுக்கான CUT OFF DATE என்றும் அந்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**BSNL MRS திட்டத்தில் HEPATITIS:-** HEPATITISக்கு சிகிச்சை பெறுவதற்கு உச்சபட்ச வரைமுறையை நீக்க வேண்டும் என நமது சங்கம் தொடர்ந்து நிர்வாகத்தை வலியுறுத்தி வந்தது. இது தொடரபாக பஞ்சாப் CGMக்கு கார்ப்பரேட் அலுவலகம் மீண்டும் கடிதம் எழுதியுள்ளது. அதில் நமது பொது செயலாளரின் கடிதத்தை குறிப்பிட்டு HEPATITIS சிகிச்சைக்கு விலக்கு அளிக்க கோரும் கடிதங்களை தலைமை பொது மேலாளரின் பரிந்துரையோடு கார்ப்பரேட் அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இது அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும்.

**நிர்வாகத்துடன் சந்திப்பு:-** நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு மற்றும் பொருளாளர் தோழர் சைபால் சென்குப்தா ஆகியோர் 03.02.2015 அன்று கார்ப்பரேட் அலுவலகத்தில் உள்ள சில அதிகாரிகளை சந்தித்து பல பிரச்சனைகளை விவாதித்து உள்ளனர். அவற்றில் ஒரு சில:-

SR.GM(SR) திரு ஷமீம் அக்தார் அவர்களை சந்தித்து IMMUNITY பிரச்சனையில் அதிகாரிகள் மற்றும் ஊழியர் சங்கங்களுக்கு உள்ள பாரபட்சம் களையப்பட வேண்டும் என்கின்ற தேசிய கவுன்சில் முடிவினை விரைவில் அமுலாக்க கேட்டுக் கொண்டதற்கு அதற்கு ஆவன செய்வதாக உறுதி அளித்தார்.

GM (CA) திரு ராஜீவ் சிங் அவர்களை சந்தித்த தலைவர்கள், ஊழியர்கள் வங்கியில் பெற்றுள்ள கடனுக்கான தவணைகளை கணக்கியல் அதிகாரிகள் தாமதமாக செலுத்துவதால் ஊழியர்களிடம் அபாராத வட்டியை வங்கிகள் வசூலிக்கின்றன. அதனை தவிர்ப்பதற்கான பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தலைவர்கள் கேட்டுக் கொண்டதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார்.

**PLI கமிட்டி:-** புதிய PLI பார்முலா உருவாக்கும் குழுவின் அடுத்தக் கூட்டம் 10.02.2015 அன்று நடைபெறும் என கார்ப்பரேட் அலுவலகம் அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

**பதவி உயர்வில் IDA ஊதிய விகிதம் நிர்ணயம்:-** 01.10.2000க்கு பின் பதவி உயர்வு பெற்றவர்களில் சிலர் தனது பதவி உயர்வு தேதியில் இருந்து IDA ஊதிய விகிதம் நிர்ணயம் செய்ய வேண்டும் எனக் கோரி இருந்தனர். அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும் என நமது சங்கமும் வலியுறுத்தி வந்தது. இந்த சூழ்நிலையில் இது தொடர்பான இறுதி முடிவு எடுப்பதற்காக DOT சில விவரங்களை கார்ப்பரேட் அலுவலகத்தினை கேட்டு உள்ளது. அந்த விவரங்களை விரைவில் அனுப்ப வேண்டும் என கார்ப்பரேட் அலுவலகம் மாநில அலுவலகங்களை கேட்டு கடிதம் அனுப்பியுள்ளது.

**FORUM கூட்டம்:-** இன்று 05.02.2015 அன்று அகில இந்திய FORUM கூட்டம் நடைபெற உள்ளது.

**மாநில செயலாளர் சென்னையில் பணியில் இணைந்தார்**:-- நமது தமிழ் மாநில செயலாளர் குன்னூரிலிருந்து விருப்ப மாற்றலில் சென்னைக்கு விண்ணப்பித்து இருந்தார். 02.02.2015 அன்று சென்னை CGM அலுவலகத்தில் உள்ள REM பிரிவில் பணியில் இணைந்துள்ளார்.

**மாநில நிர்வாகத்துடன் சந்திப்பு:-** 04.02.2015 அன்று மாநில தலைவர் தோழர் S.செல்லப்பா, மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் மற்றும் மாநில சங்க நிர்வாகிகள் தோழர் K.சீனிவாசன், தோழர் M.முருகையா, தோழர் R.மகேந்திரன் ஆகியோர் மாநில தலைமை பொது மேலாளர் உள்ளிட்ட அதிகாரிகளை சந்தித்தனர். அப்போது மாநிலம் முழுவது உள்ள சிம் கார்ட் பற்றாக்குறை தொடர்பாக விவாதிக்கப்பட்டது. இரண்டு லட்சம் சிம் கார்ட்கள் 04.02.2015 அன்று வந்துள்ளதாகவும் அதனை மாவட்டங்களுக்கு உடனடியாக வினியோகிக்கப்படும் என்றும் அவர் கூறினார். மேலும் பல்லாயிரக்கணக்கான பழைய சிம் கார்ட்கள் ACTIVATE செய்யப்படாமல் மாநிலத்தில் பல பகுதிகளில் உள்ளதாகவும், அவற்றை உடனடியாக எடுத்து பயன்படுத்தப்படும் என்றும், புதிய சிம்கார்ட்கள் வேறு பல மாநிலங்களில் இருந்தும் தருவிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார். பிரச்சனை விரைவில் சகஜ நிலைக்கு வரும் என எதிர்பார்க்கிறோம்.

**பரிவு அடிப்படையிலான பணி நியமனம்:-** பரிவு அடிப்படையிலான பணி நியமனத்திற்கான பணிகள் மார்ச் மாதம் துவங்க உள்ளது. அதற்கான சரிபார்ப்புகள் நடைபெற்று வருகிறது. உயர் மட்டக் குழு பரிசீலனை நமது மாநிலத்திலேயே நடைபெற உள்ளது. பணி கோரி வந்துள்ள பல மனுக்களுக்கு தேவையான சில விஷயங்கள் வேண்டும் என மாநில நிர்வாகத்தால் மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. அந்த விஷயங்களை உடனடியாக மாநில நிர்வாகத்திற்கு அனுப்ப மாவட்ட செயலர்கள் முன் முயற்சி எடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுள்ள,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**